

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண் - 31

## அறிவிப்புகள்
## 2014 - 2015

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

மானியக் கோரிக்கை எண்—31

# அறிவிப்புகள்
# 2014—2015

திரு. முக்கூர் என். சுப்பிரமணியன்
தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்

## 1) தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் வாயிலாக அரசு பொது சேவை மையங்கள் அமைத்தல் (Arasu Common Service Centres through Tamil Nadu Arasu Cable TV Corporation)

தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம், உயர்தர கேபிள் டி.வி. சேவையினை மிகக்குறைந்த மாத சந்தா தொகையான ரூபாய் 70/–க்கு உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் வாயிலாக பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** இந்நிறுவனம், முன்னோடித் திட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 அரசு பொது சேவை மையங்களை (Arasu Common Service Centres) உள்ளூர் அரசு கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் வாயிலாக ரூபாய் 1 கோடி செலவினத்தில் ஏற்படுத்தும்.

## 2) குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோருக்கு மின் ஆளுமை விருதுகள் (e-Governance Awards to Micro, Small and Medium Enterprises and Entrepreneurs)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** மக்களுக்கான சேவைகளை ஏற்று நடத்த மென்பொருள் பயன்பாடுகளை உருவாக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோரின் சமூகப் பொறுப்புணர்வை மதித்து அங்கீகாரம் செய்யும் வகையில், ஒவ்வொரு பிரிவிலும் முதலில் வரும் மூன்று நிறுவனங்களுக்கு / தொழில் முனைவோருக்கு, ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 12 இலட்சம் செலவில் மின் ஆளுமை விருது கோப்பைகள் வழங்கப்படும். மேலும், அவர்களால் தயாரிக்கப்பட்ட மென்பொருள்களை அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு அரசின் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள வழிவகை செய்யப்படும்.



## 3) தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்ப வாரம் (Information and Communication Technology Week)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் மின் ஆளுமை பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த ஒவ்வொரு வருடமும் "தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப வாரம்" (ICT Week) அனுசரிக்கப்படும். விழிப்புணர்வு பயிற்சி முகாம்கள், கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் வினாடி–வினா போட்டிகள் ஆகியவை மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு, வெற்றி பெறும் அணிகளுக்கு, இந்த வாரத்தில் பரிசுகள் வழங்கப்படும். இத்திட்டம் ரூபாய் 10 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்படும்.

## 4) மேகக் கணினி அடிப்படையில் உடைமை மேலாண்மை நடைமுறைப்படுத்துதல் (Implementation of Cloud Based Asset Management)

தமிழக அரசுத்துறைகள் அதிக அளவிலான தகவல் தொழில்நுட்ப உடைமைகள் (IT assets) மற்றும் தகவல் தொழில்நுட்பம் சாராத உடைமைகளை (non-IT assets) கொள்முதல் செய்து நிறுவி வருகின்றன. இந்த உடைமைகளை முறையாக நிர்வகிக்கவும், பராமரிக்கவும் ஏதுவாக **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** ரூபாய் 30 இலட்சம் செலவில் "மேகக் கணினி அடிப்படையில் உடைமை மேலாண்மை" மென்பொருள் நடைமுறைப்படுத்தப்படும்.



## 5) தமிழ்நாடு மின் ஆளுமை தர நிர்ணய கையேடு (Tamil Nadu e-Governance Standards Manual)

மின் ஆளுமைக்கான தகவல் பரிமாற்றத்தை எளிதாக்கும் வகையில் மென்பொருள் வடிவமைத்தல் மற்றும் மேம்பாடு, சோதனை, கண்காணித்தல் மற்றும் கட்டுப்பாடு, தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளை செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றை திறம்பட செய்திட தரம் (standards) நிர்ணயிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** அனைத்து அரசுத் துறைகளும், அரசு முகமைகளும் பயன்படுத்தும் வகையில், தமிழ் மற்றும் ஆங்கிலவழி கணினி பயன்பாட்டிற்கான "தமிழ்நாடு மின் ஆளுமை தர நிர்ணய கையேடு" ஒன்று வெளியிடப்படும்.

## 6) மின் ஆளுமை விருதுகளுக்கான இணையவழி கண்காணிப்பு திட்டம் (Online e-Governance Award Monitoring System)

மின் ஆளுமைக்கான விருதுகளுக்காக அனுப்பப்படும் விண்ணப்பங்களையும், முன்மொழிதல் விண்ணப்பங்களையும் கண்காணிக்க, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** "மின் ஆளுமை விருதுகளுக்கான இணையவழி கண்காணிப்பு திட்டம்" என்ற மென்பொருள் ரூபாய் 15 இலட்சம் செலவில் தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் (Tamil Nadu State Data Centre) மேகக்கணினியம் வாயிலாக ஏற்படுத்தப்படும்.



## 7) வாடிக்கையாளர் தொடர்பு மேலாண்மை (Customer Relationship Management)

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** அரசின் திட்டங்கள், தொடர்பு விவரங்கள், சேவைகளின் விவரங்கள், தகுதிகள், நிலைப்பாடு அறிதல் போன்ற தகவல்களை வழங்குவதன் மூலம் அரசின் திறமையான தகவல் தொடர்புக்கும், முடிவெடுத்தலுக்கும் வழிகோலும் வகையில் "வாடிக்கையாளர் தொடர்பு மேலாண்மை" மென்பொருள் ரூபாய் 22 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

## 8) முக்கிய செயல்பாடுகளின் அளவீடுகளை ஆய்வு செய்வதற்கான இணையவழி தொழில் சாதுரிய மென்பொருள் (Online Business Intelligence Solution for Key Performance Indicator Analysis)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** திட்டமிடல் மற்றும் பராமரிப்பிற்கான வன்பொருள் பயன்பாடு மற்றும் வலையமைப்பு வளங்களின் (Network Resources) அளவீடுகளை ஆய்வு செய்யும் "இணையவழி தொழில் சாதுரிய மென்பொருள்" ரூபாய் 23 இலட்சம் செலவில் தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC) மற்றும் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பில் (TNSWAN) அமைக்கப்படும். இந்த மென்பொருள் உடனடி முடிவெடுத்தல், சரிசெய்தல் மற்றும் தடுப்பு நடவடிக்கைக்கான திட்டமிடுதல் ஆகியவற்றிற்கு உதவிபுரியும்.



## 9) தமிழ் மின் நிகண்டு உருவாக்குதல் (Development of Visual Thesaurus for Tamil)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தமிழ் இணையக் கல்விக்கழகம் "தமிழ் மின் நிகண்டு" ஒன்றினை ரூபாய் 27.42 இலட்சம் செலவில் உருவாக்கும். இந்த தமிழ் மின் நிகண்டில் ஒரே பொருள் கொண்ட பல்வேறு சொற்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, அவற்றின் உச்சரிப்பு மற்றும் விளக்கங்கள் ஒரு தொகுப்பாக அமைக்கப்படும். தேவையான சொல்லைத் தட்டச்சு செய்தால், அச்சொல்லின் பொருள் கொண்ட பல சொற்கள் கணினித் திரையில் வெளிப்படும்.

## 10) தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் மின்கற்றலுக்கான இணையதளம் (Development of e-Learning Portal for Tamil Virtual Academy)

ஒன்றாம் வகுப்பு முதல் B.A. (தமிழியல்) வரையிலான பாடத்திட்டங்களை தமிழ் இணையக் கல்விக்கழகம் இணையதளம் வாயிலாக வழங்கி வருகிறது. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** "மின்கற்றலுக்கான இணையதளம்" (e-Learning Portal) தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் ரூபாய் 12.26 இலட்சம் செலவில் அமைக்கப்படும். மாணவர்கள் எளிதாக தமிழை கற்க இந்த இணையதளம் உதவும்.



## 11) தமிழ் பாரம்பரியம், கலை மற்றும் பண்பாடு பற்றிய மாதாந்திர தொடர் சொற்பொழிவு (Monthly Lecture Series on Tamil Heritage, Art and Culture)

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தமிழ் பாரம்பரியம், கலை மற்றும் பண்பாடு பற்றிய தொடர் சொற்பொழிவு தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் மாதந்தோறும் நடத்தப்படும். இதில் சிறந்த அறிஞர்கள் மற்றும் வல்லுநர்கள் சொற்பொழிவு ஆற்றுவார்கள். இவை பதிவு செய்யப்பட்டு, உலகெங்கும் வாழும் தமிழர்கள் பார்த்து பயன்பெறும் வகையில் இணையத்தில் ஒளிபரப்பாக (Webcast) ஆவணப்படுத்தப்படும்.

## 12) நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் மின்னுருவாக்கம் (Digitization of Nationalised Books)

நாட்டுடைமையாக்கப்பட்ட 2,211 நூல்கள் உரும்படமாக (PDF format) தமிழ் இணையக் கல்விக்கழக மின்நூலகத்தில் ஏற்றம் செய்யப்பட்டுள்ளன. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** இந்த நூல்களை தேடுதல் வசதியுடன் கூடிய மின்னுருவாக்கம் (digitization) செய்யும் பணிகள் ரூபாய் 10 இலட்சம் செலவில் தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் மேற்கொள்ளப்படும்.

**முக்கூர் என். சுப்பிரமணியன்**
**தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**